KEMENTERIAN SUMBER MANUSIA

# "KERATAN AKHBAR KESUMA"

## ISNIN
## 5 Januari 2026

| | |
|---|---|
| Akhbar | Utusan Malaysia |
| Tarikh | 5 Januari 2026 |
| Ruang | Dalam Negeri |
| Muka Surat | 5 |

Utusan Malaysia



# Kisah Cikgu Noraini dan ribuan penjaga yang belum dilindungi

Oleh DATO' SRI RAMANAN RAMAKRISHNAN
MENTERI SUMBER MANUSIA



"Menjadi satu keperluan bagi mengiktiraf penjaga domestik sebagai 'pekerja' agar mereka berada dalam liputan perlindungan keselamatan sosial. Tanpa pengiktirafan formal, penjaga domestik akan terus terpinggir daripada jaringan keselamatan."

RAMANAN RAMAKRISHNAN

**SETIAP** pagi, Cikgu Noraini bangun lebih awal daripada kebiasaan, bukan lagi untuk kuliah atau mesyuarat akademik, tetapi untuk memastikan ibunya yang uzur akibat strok berada dalam keadaan selesa dan selamat.

Rutin ini dilakukan tanpa gaji, cuti atau jaminan masa depan, hanya bersandarkan kasih seorang anak.

Pada usia 35 tahun, Noraini merupakan pensyarah di sebuah pusat pengajian tinggi sebelum hidupnya berubah apabila ibunya memerlukan penjagaan sepenuh masa.

Beliau membuat keputusan berat meninggalkan kerjaya akademik dan pulang ke kampung di Melaka. Bagi Noraini, menjaga insan yang melahirkannya adalah khidmat bakti kepada bonda tercinta.

Namun pengorbanan ini hadir bersama kehilangan besar. Noraini terpaksa berjauhan dengan suami dan anak-anak di Kuala Lumpur, manakala hari-harinya tertumpu kepada menjaga ibunya dalam membantu pergerakan, mengurus ubat, memantau emosi dan sentiasa bersedia.

Seperti ramai penjaga domestik lain, Noraini kini hidup tanpa pendapatan tetap apabila kerjayanya terhenti dan simpanannya tidak lagi bertambah, menjadikan masa depan kewangannya semakin tidak menentu.

Tanggungjawab seperti ini membawa kesan jangka panjang, kerana ramai penjaga terpaksa mengurangkan waktu bekerja atau berhenti terus, sekali gus menjejaskan simpanan persaraan yang sepatutnya dibina sepanjang usia produktif.

Tahun-tahun yang dihabiskan untuk menjaga akhirnya boleh berubah menjadi ketidakjaminan pada usia tua, kerana realiti kerja penjagaan yang dilakukan setiap hari masih belum diiktiraf sebagai pekerjaan dalam sistem rasmi.

Menyedari hakikat ini, ia menjadi satu keperluan bagi mengiktiraf penjaga domestik sebagai 'pekerja' agar mereka berada dalam liputan perlindungan keselamatan sosial. Tanpa pengiktirafan formal, penjaga domestik akan terus terpinggir daripada jaringan keselamatan, sekali gus meletakkan masa depan mereka dalam risiko selepas berbakti menjaga warga emas, pesakit kronik dan Orang Kurang Upaya (OKU).

Secara peribadi saya menganggap, tugas penjagaan di rumah merupakan peranan penting dalam ekosistem ekonomi dan sosial negara, namun sumbangan mereka amat jarang diiktiraf walaupun penjaga berdepan tekanan emosi, risiko kesihatan serta ketidaktentuan kewangan.

Berbeza dengan pekerja formal, penjaga domestik masih belum diberikan perlindungan sewajarnya. Seiring peningkatan kebergantungan terhadap penjagaan di rumah, peranan mereka menjadi semakin kritikal kepada keluarga dan sistem kesihatan negara.

Rentetan itu, melalui agensi Pertubuhan Keselamatan Sosial (PERKESO), perlindungan sosial perlu berasaskan risiko kehidupan, bukan status pekerjaan, selari inisiatif LINDUNG Kasih dan LINDUNG Kendiri yang ada dalam perkhidmatan agensi berkenaan.

LINDUNG Kasih menekankan keperluan melindungi wanita dan suri rumah yang memikul tanggungjawab menjaga orang lain, satu peranan yang jarang diiktiraf sebagai pekerjaan, walaupun risikonya nyata.

LINDUNG Kendiri pula mengiktiraf individu yang menanggung risiko secara sendiri tanpa perlindungan pekerjaan tetap atau sokongan institusi. Dalam konteks ini, penjaga domestik tergolong dalam kedua-dua kategori berkenaan.

Pendekatan lebih fleksibel wajar diteroka agar penjaga domestik tidak tercicir daripada perlindungan sepanjang hayat, seiring pendekatan bagi pekerja gig dan suri rumah.

Pengiktirafan penjaga domestik adalah langkah pertama. Menyokong mereka adalah langkah seterusnya. Memastikan mereka dilindungi sepanjang hayat adalah kunci kepada sistem penjagaan yang berdaya tahan, ini adalah perjuangan kita bersama.

Kisah Cikgu Noraini bukan kisah terpencil, tetapi ia adalah suara ribuan penjaga yang berkorban tanpa balasan dan masih menunggu untuk dilindungi. Sudah tiba masanya pengorbanan ini diiktiraf sebagai sumbangan besar negara.

Pendekatan lebih fleksibel dan berkesinambungan wajar diteroka agar penjaga domestik tidak tercicir daripada perlindungan sepanjang hayat, seiring pendekatan bagi pekerja gig dan suri rumah.

Saya juga menyanjung tinggi usaha dimainkan oleh pihak media yang melaporkan tentang perlunya mengiktiraf secara rasmi dan menyokong penjaga domestik, di mana ia telah merungkai cabaran penjaga domestik, termasuk saranan agar mereka diberikan pengiktirafan dan sokongan sejajar dengan tanggungjawab serta risiko.



TUGAS penjagaan di rumah merupakan peranan penting dalam ekosistem ekonomi dan sosial negara, namun sumbangan mereka amat jarang diiktiraf.

RIBUAN penjaga yang berkorban tanpa balasan dan masih menunggu untuk dilindungi. - GAMBAR HIASAN

| | |
|---|---|
| Akhbar | Tamil Nanban |
| Tarikh | 5 January 2026 |
| Ruang | Nation |
| Muka Surat | 3 |



# சொந்தங்களை பராமரிப்பவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு போற்றத்தக்கது

## அவர்களுக்காக சொக்சோவில் 2 காப்பீட்டுத் திட்டங்கள்



கோலாலம்பூர், ஜன. 5- ஆசிரியை நோராய்னி ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து வழக்கமாக தமது பணிக்குத் தேவையான விரிவுரைகள் மற்றும் கல்வித்தொடர்பான கூட்டங்களுக்கு தயாராவதில்லை.

இப்போதெல்லாம் காலையில் அவர் எழுந்தவுடன் கவனிப்பது பக்கவாதத்திற்கு ஆளான தமது தாயாரை கவனித்துக்கொள்வதுதான்.

அதற்கு அவருக்கு எந்தவொரு ஊதியமும் இல்லை. விடுமுறையும் இல்லை. எதிர்கால உத்தரவாதமும் இல்லை. ஒரு மகளின் கடமையை அவர் நிறைவேற்றுகிறார்.

### திடீர் மாற்றம்

நோராய்னி தமது 35 ஆவது வயதில் உயர்கல்வி நிலையம் ஒன்றில் ஒரு விரிவுரையாளராக விளங்கினார். தன் தயாருக்கு ஏற்பட்ட இந்த நிலையால் அவரது வாழ்க்கையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. தமது கல்விப்பணியை கைவிட மனமில்லாமல் வேறு வழியின்றி கைவிட வேண்டி நேர்ந்தது.

தமது சொந்தஊரான மலாக்காவுக்கு திரும்பி தமது தாயாரை கவனித்து வருகிறார். அதுமட்டுமல்ல கோலாலம்பூரில் இருக்கின்ற தமது கணவர் மற்றும் பிள்ளைகளை விட்டு பிரிந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்.

தமது தாயாரை அவர் முழுமையாக கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு அவருக்கு மருந்து தருவது அவரது தேவைகளை கவனிப்பது. அவரது உடல்நிலையை மனநிலையை பார்த்துக்கொள்வது என்ற கடமையில் அவர் மூழ்கி இருக்கிறார்.

### இவரை போல மற்றவர்கள்

இவரைப்போல ஒரு குடும்பத்தில் பலரை பராமரிக்கும் நிலையில் உள்ள பலருக்கு நிலையான வருமானம் இல்லை . நோராய்னியின் வருமானம் நின்றுபோனது. அவரது சேமிப்பை பெருக்க வேறு வழியில்லை.அவரது எதிர்கால நிதி நிலைமை நிச்சயமற்று கிடக்கிறது.

சிலருக்கு நேரும் இது போன்ற திருப்பங்கள் ஒரு நீண்ட கால விளைவுகளை அவர்களுக்கு ஏற்படுத்து கின்றன. பலர் பணி நேரத்தை குறைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.





அல்லது வேலையை விட்டு விலக வேண்டி இருக்கிறது. இதனால் அவர்களின் ஓய்வுகால சேமிப்பு பாதிக்கிறது.

இவ்வளவு நாள் வேலை செய்ததால் கிடைத்த சேவை ஊதியமும் கிடைக்காமல் போகிறது. இப்படி பலரை பார்த்து கொள்ள வேண்டிய நிலையில் இருப்பவர்கள் ஓர் உத்தரவாதமற்ற நிலையில் இருக்கிறார்கள்.

இவர்களின் இந்த பராமரிப்புப் பணி ஒரு அதிகாரப்பூர்வ வேலையாக கருதப்படாமல் அங்கீகரிக்கப்படாமல் போகிறது. எனவே இத்தகைய பராமரிப்பு பணியில் இருக்கின்றவர்களையும் தொழிலாளர்கள் என்று வகைப்படுத்தி அவர்களையும் சமூகப் பாதுகாப்பு திட்டத்திற்கு கொண்டு வருவது அவசியமாகிறது.

இல்லை என்றால் எதிர்காலத்தில் வயதான காலத்தில்இவர்களுக்கு எந்தவொரு பாதுகாப்பும் இல்லாமல் குறிப்பாக கடுமையான நோய்கள் மற்றும் உடல் செயல் இழப்பு ஏற்படும்போது அவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

என்னை பொறுத்தவரை வீடுகளில் இது போன்ற மற்றவர்களை கவனித்து கொள்கின்றவர்கள் நாட்டில் பொருளாதார -சமூக அமைப்பில் ஒரு தூண்களாக விளங்குகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் இவர்களின் இந்த தியாகம் கண்டுக்கொள்ளப்படாமல் போகிறது.

இவர்களுக்கும் உணர்ச்சி வழிகளிலான மன நெருக்கடிகள் உண்டு. சுகாதார பாதிப்புகள் உண்டு. பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் உண்டு. என்றாலும் இவர்களுக்கான சரியான் சமூக பாதுகாப்பு வளையங்கள் இல்லை.

### சொக்சோவின் 2 திட்டங்கள்

எனவே பெர்கெசோ எனப்படும் சமூக பாதுகாப்பு நிறுவனத்தின் வழி இவர்களுக்கும் தக்க பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும்.அவர்களின் பணியை ஒரு வேலைக்குரிய அந்தஸ்தாக மாற்ற வேண்டும்.

சொக்சோ திட்டத்தின் கீழ் உள்ள லிண்டுங் காசே மற்றும் லிண்டுங் கெண்டிரி என்ற திட்டங்களின் மூலம் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படலாம்.

லிண்டுங் காசே திட்டத்தின் கீழ் வீடுகளில் மற்றவர்களை கவனித்து கொள்கின்றவர்களின் பங்களிப்பை ஒரு பணியாக அங்கீகரிக்க முடிவு செய்யப்படுகிறது.

அதே போல லிண்டுங் கெண்டிரி என்பது நிலையான ஒரு வேலை வாய்ப்பு பாதுகாப்பு அல்லது ஆதரவு இன்றி தடுமாறுகின்ற இது போன்ற பராமரிப்பாளர்களை பாதுகாக்குகிறது.

நாட்டின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் தினச் சம்பள பணியாளர்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் வழங்கப்படுகின்ற வேளையில் இவர்களின் பணியையும் அங்கீகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.முதலில் இவர்களின் சேவையை ஒரு பணியாக அங்கீகரிப்பது. பிறகு அவர்களின் சேவைக்கு பாதுகாப்பு அளிப்பது.

ஆசிரியை நோராய்னியின் கதை ஏதோ நாட்டில் நிலவும் ஒருவரின் பிரச்சினை அல்ல ஆயிரக்கணக்கான பராமரிப்பாளர்களின் எந்தவொரு வெகுமதியும் இன்றி சேவை செய்யும் தியாகமும் அர்ப்பணிப்பும் நாட்டுக்கான ஒரு பங்களிப்பாக நாம் கருத வேண்டும்.

### இவர்களை மறக்கக்கூடாது

எனவே இவர்களை மறக்கக்கூடாது. வாழ்நாள் சமூக பாதுகாப்பில் இவர்களை கைவிட்டுவிடக்கூடாது. தினச் சம்பள பணியாளர்கள் மற்றும் இல்லதரசிகளுக்கான சொக்சோ பாதுகாப்பை போல இவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

இதற்கு தகவல் சாதனங்கள் ஆற்றுகின்ற பணி மிக முக்கியமானது.இவர்களுக்கு உரிய பாதுகாப்பை ஏற்படுத்துங்கள் என்று ஊடகங்கள் வெளியிட்ட கருத்துகளை நான் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். அவர்களுக்குள்ள பிரச்சினைகள் சவால்களை களைய உரிய நடவடிக்கை எடுங்கள் என்ற அவற்றின் கருத்துகளை மதித்து ஏற்றுக்கொள்கிறேன்.

- டத்தோஸ்ரீ ரமணன் ராமகிருஷ்ணன்
மனிதவள அமைச்சர்